ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2159/11 - 2020 ජනවාරි මස 21 වැනි අඟහරුවාදා - 2020.01.21

*2159/11 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***3 ஆவது திருத்தம்***

இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

*2016, மாச்சு 01 ஆந் திகதிய 1956/16 ஆம் இலக்க மற்றும் 2019, செத்தெம்பர் 16 ஆந் திகதிய 2142/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் திருத்தப்பட்ட மற்றும் 2015, ஒகத்து 21 ஆந் திகதிய 1928/28 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது. இந்தத் திருத்தம் 2015, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

*எம். ஏ. பி. தயா செனரத்,*
*செயலாளர்,*
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

*2020, சனவரி 17.*

1A - G 31840 — 20 (2020/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**10.3.2 பதவி உயர்வு வழங்கும் முறை**

ஒவ்வொரு வருடமும் சனவரி மாதம் 01 ஆந் திகதி மற்றும் யூலை மாதம் 01 ஆந் திகதிக்கு விசேட தரத்தில் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையில் நிலவும் வெற்றிடங்களுக்காக மேற்படி 10.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் சேவைமூப்பு அடிப்படையில் விசேட தரத்திற்கு பதவி உயர்த்தப்படுவர்.

(i) வெற்றிடங்கள் கணக்கிடப்படும் தினத்தன்று தரம் 1 இல் உள்ள உத்தியோகத்தர்களில் சேவைமூப்பு தொடர் ஒழுங்கிற்கு அமைய, வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கிற்கு குறையாத எண்ணிக்கையைக் கொண்ட உத்தியோகத்தர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் அந்த உத்தியோகத்தர்களின் அடிப்படைத் தகைமைகள் மற்றும் சேவை மூப்பு என்பன மாத்திரம் பரீட்சிக்கப்படும்.

(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அந்த நேர்முகப் பரீட்சைச் சபையினால் முன்வைக்கப்படும் சிபாரிசுகளுக்கு அமைய வெற்றிடங்கள் கணக்கிடப்படும் திகதியன்று தரம் 1 இல் உள்ள உத்தியோகத்தர்களின் சேவைமூப்பு தொடர் ஒழுங்குக்கு அமைய, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விசேட தரத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கு சமமான எண்ணிக்கையைக் கொண்ட உத்தியோகத்தர்கள் விசேட தரத்திற்கு பதவி உயர்த்தப்படுவர்.

**குறிப்பு :**

விசேட தரத்தின் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களைக் கணக்கிடும் போது அமைச்சரவையினால் விசேட தரத்திற்குரிய பதவியொன்றுக்கு அதற்கு கீழுள்ள தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருக்குமிடத்து விசேட தரத்திற்கான வெற்றிடங்களை கணக்கிடும் போது அந்தப் பதவியும் வெற்றிடமொன்றாகக் கருதப்படும்.

02-37

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.